## கோவை மாவட்டம் – சாடிவயலில் ரூ. 8 கோடி மதிப்பில் யானைகள் பராமரிப்பு முகாம்!

# ரூ.19.50 கோடியில் - வன உயிரின இடமாற்றம் - சிகிச்சை மையம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் காணொலி வாயிலாகத் திறந்து வைத்தார்!

கோவை, ஜன.1 –

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கோயம்புத்தூர் வனக்கோட்டத்தில் 19.50 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட வன உயிரின இடமாற்றம் மற்றும் சிகிச்சை மையம், சாடிவயலில் 8.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள யானைகள் பராமரிப்பு முகாம், 2.60 கோடி ரூபாய் செலவில் வடிவமைக்கப்பட்டுள்ள மின்னணு வன-ஆவணக் காப்பக இணையதள சேவை ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு அனைத்து துறைகளிலும் சீரான வளர்ச்சியை ஏற்படுத்தி தமிழ்நாட்டை இந்திய அளவில் மட்டுமல்லாது, உலக அளவிலும் முக்கிய இடம் பெறச் செய்து வருகின்றது. அதனடிப்படையில் தமிழ்நாட்டின் பல்லுயிர் பெருக்க பாரம்பரியத்தை பாதுகாப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகின்றார்.

தமிழ்நாடு பல்வகை பாலூட்டிகள், பறவைகள், ஊர்வன மற்றும் மீன்கள் உள்ளிட்ட 5,000க்கும் மேற்பட்ட உயிரினங்களை கொண்டுள்ளது. இந்நிலையில், அதிகரிக்கும் நகரமயமாக்கல், வாழிட இழப்பு, சாலை விபத்துகள், வேட்டை மற்றும் காலநிலை மாற்றம் காரணமாக காயமடைந்த மற்றும் கூட்டத்திலிருந்து பிரிந்த வன விலங்குகள் மற்றும் மனித-வன உயிரின மோதல்களால் பாதிக்கப்படும் வனவிலங்குகளுக்கு சிகிச்சை அளித்திட மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக கோயம்புத்தூர் வனக்கோட்டம் பெத்திக்குட்டையில் 19.50 கோடி ரூபாய் செலவில் அதிநவீன வசதிகளுடன் கூடிய ஒரு மாநில அளவிலான வனஉயிரின இடமாற்றம் மற்றும் சிகிச்சை மையம் கட்டப்பட்டுள்ளது. இந்த மையத்தில் மீட்கப்பட்ட வனஉயிரினங்களுக்கு உயர்தர சிகிச்சை அளிக்கவும் அவற்றை பாதுகாக்கவும் அதிநவீன அறுவை சிகிச்சை அரங்கு, 17 வனஉயிரின அமைவிடங்கள் மற்றும் முழுமையான மருத்துவ வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நம்மாநிலத்தில் வனக் குற்றங்கள் மற்றும் வனஉயிரின கடத்தல்களை தடுத்திடவும், வனம் மற்றும் வனஉயிரின பாதுகாப்பை மேம்படுத்தவும், தமிழ்நாடு வனஉயிரின குற்றத் தடுப்பு பிரிவு தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

யானைகள் பாதுகாப்பில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக செயல்பட்டு வருகிறது. யானை மேலாண்மையின் அதிகரிக்கும் தேவையை உணர்ந்து கோயம்புத்தூர் மாவட்டம் சாடிவயாலில் 8.00 கோடி ரூபாய் செலவில் யானைகள் பராமரிப்பு முகாம் அமைக்கப்பட்டது.

சுமார் 200 ஆண்டுகள் பழமையான தமிழ்நாடு வனத்துறையின் முக்கிய ஆவணங்கள், வரைபடங்கள் மற்றும் வரலாற்று ஆவணங்கள் போன்ற மதிப்புமிக்க தொகுப்புகளை, ஆராய்ச்சியாளர்கள், வனஅலுவலர்கள், கல்வியாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் கொண்டு சேர்க்கும் வகையில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, "தமிழ்நாடு வனக் காப்பகப் பதிவுகள் சேமிப்பு மையம் (Tamil Nadu Forest Archives Repository)" எனப் பெயரிடப்பட்டு, தமிழ் இணையக் கல்விக் கழகம் மூலமாக 2.60 கோடி ரூபாய் செலவில் மின்னணு ஆவணக் காப்பகமாக இணையதளத்தில் தொகுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (30.12.2025) கோயம்புத்தூர் மாவட்டம் வட கோவை தமிழ்நாடு வனக்கல்லூரியில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வன விலங்கு பாதுகாப்பை வலுப்படுத்தி, தமிழ்நாட்டின் பல்லுயிர் பெருக்க பாரம்பரியத்தை பாதுகாக்கும் வகையில் கோயம்புத்தூர் வனக்கோட்டம் பெத்திக்குட்டையில் 19.50 கோடி ரூபாய் செலவில் அதிநவீன அறுவை சிகிச்சை அரங்கம் உள்ளிட்ட வசதிகளுடன் கட்டப்பட்ட வன உயிரின இடமாற்றம் மற்றும் சிகிச்சை மையத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

தொடர்ந்து, கோயம்புத்தூர் மாவட்டம் சாடிவயலில் 8.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள யானைகள் பராமரிப்பு முகாம் மற்றும் தமிழ்நாடு வனத்துறையின் முக்கிய ஆவணங்கள், வரைபடங்கள் மற்றும் வரலாற்று ஆவணங்களை ஆராய்ச்சியாளர்கள், வனத்துறையினர், கல்வியாளர்கள் மற்றும் பொதுமக்கள் எளிதில் பார்வையிடும் வகையில் தமிழ் இணையக் கல்விக் கழகத்தினால் தமிழ்நாடு வனக் காப்பகப் பதிவுகளின் சேமிப்பு மையமாக 2.60 கோடி ரூபாய் செலவில் வடிமைக்கப்பட்டுள்ள மின்னணு ஆவணக் காப்பக இணையதள சேவையினை காணொலி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு வனப்படை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் வனம் மற்றும் வனஉயிரின பாதுகாப்பு பணிகளுக்காக 315 ஸ்போர்ட்டிங் ரைஃபிள்கள், 9mm ஆட்டோ பிஸ்டல்கள் உள்ளிட்ட படைக்கலன்களை துணை வன பாதுகாவலர், வனச் சரகர், வனவர் மற்றும் வனக் காப்பாளர்களுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் கணபதி ப.ராஜ்குமார், க.ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி, தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் வாரியத் தலைவர் திப்பம்பட்டி ஆறுசாமி, சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹூ, மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், மாநகராட்சி மேயர் திருமதி கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வனத்துறைத் தலைவர் ஸ்ரீனிவாஸ் ரா.ரெட்டி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், வனத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலை!

# திருச்சி தெற்கில் - துணை முதல்வர் பிறந்த நாள் விழா - பட்டிமன்றம்!

## கு.செல்வப்பெருந்தகை துவக்கி வைத்தார்!



திருச்சி, ஜன. 1-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 48 வது பிறந்தநாளை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்டம் திருச்சி மாநகர தி.மு.க. சார்பாக சிறப்பு பட்டிமன்றம் காட்டூர் இந்தியன் பேங்க் அருகில் உள்ள டர்ப் மைதானத்தில் மாநகர கழக செயலாளர் மண்டல குழு தலைவர் மு.மதிவாணன் தலைமையில் நடைபெற்றது.

தமிழக பள்ளி கல்வித் துறை அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி மாநில தலைவர் கு.செல்வப்பெருந்தகை பட்டிமன்றத்தை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

**தலைப்பு**

இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலினின் வெற்றிக்குப் பெறும் துணை நிற்பது கட்சிப் பணியே அரசுப்பணியே என்ற தலைப்புகளில் நடைபெற்றது.

பட்டிமன்ற நடுவர் கழக கொள்கை பரப்புச் செயலாளர் திண்டுக்கல். லியோனி, இரு அணியிலும் கவிஞர் இனியவன், கடலூர் தணிகைவேலன், பேரா.விஜயக்குமார் திருமதி.நாகநந்தினி கலந்து கொண்டு உரையாற்றினார்.

இந்நிகழ்வில் மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் சல்மா, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.இனிகோ இருதயராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கே. என்.சேகரன், பி.எம்.சபியுல்லா, மாநில அணி நிர்வாகி என்.செந்தில், பகுதி கழகச் செயலாளர் நிலமேகம், மாநகர கழக நிர்வாகிகள் நூர்கான், தமிழ்ச்செல்வம், சந்திரமோகன், பொன். செல்லையா, சரோஜினி, மற்றும் மாவட்ட மாநகர ஒன்றிய பகுதி நகர பேரூர் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேலும் இந்த சிறப்பு பட்டிமன்றத்தில் தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி உரையாற்றியதாவது:-

நடைபெற்று கொண்டிருக்கக் கூடிய துணை முதல்வரின் 48 வது பிறந்தநாள் நிகழ்ச்சியாக இந்த சிறப்பு பட்டிமன்றம் நிகழ்ச்சி நடைபெற்று வருவதாகவும் திருச்சி தெற்கு மாவட்டத்தின் சார்பில் 48 நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதாக முடிவு செய்யப்பட்டு நிறைவு நிகழ்வாக இந்த சிறப்பு பட்டிமன்றம் நடைபெற்று வருவதாகவும் இந்த சிறப்பு பட்டிமன்றத்திற்கு வருகை புரிந்திருக்க கூடிய தமிழக மாநில காங்கிரஸ் தலைவர் எனது அண்ணன் செல்வப் பெருந்தகை அவர்களை நான் வரவேற்பதாகவும் அவர் செல்வத்தில் பெருந்தையாக இருக்கிறாரா என்பது எனக்கு தெரியவில்லை ஆனால் மனதிலும் குணத்திலும் பெருந்தையாக திகழ்ந்து வருகிறார் என்றும் 120 ஆண்டுகளுக்கு பழமை வாய்ந்த காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவர் ஒருவர் நமது துணை முதல்வர் வாழ்த்துகிறார் என்றால் அது நமக்கான பெருமையாக நான் கருதுவதாகவும் எடுத்துரைத்தார் மேலும் கடந்த 2021 ஆம் ஆண்டில் நாம் ஆட்சிக்கு வந்த பொழுது இக்கட்டான சூழ்நிலையில் இருந்த தமிழகத்தை தற்பொழுது தனது ஆட்சி நிர்வாக திறமையால் இரட்டை இலக்க பொருளாதாரத்தை உயர்த்தி உள்ளார் தமிழக முதல்வர்.

ஆனால் நமது தமிழக முதல்வர் அவர்களின் சிறப்பான ஆட்சித் திறமையால் கல்வியில் இந்த மூன்று ஆண்டுகளில் கல்வியில் சிறந்தது தமிழ்நாடு பெண்களுக்கு பாதுகாப்பு மற்றும் அவர்களுக்கென பல்வேறு நலத்திட்டங்களை செய்து வந்துள்ளதாகவும் எனவே இதற்கு முதல்வரின் கரங்களை வலுப்படுத்த கூடியவராக இருக்கக்கூடிய துணை முதல்வர்கள் பிறந்த நாளை தான் இன்று நாம் கொண்டாடி வருகிறோம் என்றும் மேலும் தமிழகத்தின் முத்தான திட்டமான நான் முதல்வன் திட்டத்தின் மூலம் 2024-25ல் எந்த ஆண்டும் இல்லாதவரை தற்பொழுது 57 பேர் ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். தேர்வில் தேர்வாகியுள்ளதாகவும் இதை பார்த்து தான் ஒன்றிய அரசு நம்மை பார்த்து வாழ்த்துவது மட்டுமல்லாமல், பயப்படுவதாகவும், எடுத்துரைத்தார் மேலும் தேர்தலுக்கு இன்னும் 60 நாட்களில் தான் உள்ளதாகவும் எனவே நாம் அனைவரும் ஒன்றிணைந்து தமிழக முதல்வர் அரியணையில் ஏற்றுவதற்கு அயராது பாடுபட வேண்டும் என்றும் எடுத்துரைத்தார் கடந்த 2021 இல் இருந்து தற்போது வரை இந்த 55 மாதங்களில் நமது திருவரம்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பொன்மலை , காட்டூர் திருவெறும்பூர் அரியமங்கலம் பாலக்கரை பகுதிகள் மற்றும் திருவரம்பூர் வடக்கு ஒன்றியம் மற்றும் தெற்கு ஒன்றியம் துவாக்குடி நகராட்சி கூத்தைப்பார் பேரூராட்சி என 383.12 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்து உள்ளதாகவும் மேலும் இதை சுருக்கமாக கூறினால் மாதத்திற்கு 7 கோடி ரூபாய் பணிகள் ஒவ்வொரு பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் எடுத்துரைத்தார்.

பட்டி மன்ற நிகழ்வில் காங்கிரஸ் மாநில தலைவர் செல்வப் பெருந்தகை ஆற்றிய உரை தி.மு.க காங்கிரஸ் கூட்டணியை ஒருபோதும் யாராலும் பிரிக்க முடியாது. இது சீட்டுக்காக உருவாக்கப்பட்ட கூட்டணி அல்ல. கொள்கையால் உருவாக்கப்பட்ட கூட்டணி.

**எண்ணிக்கைக்காக உருவாக்கப்பட்ட கூட்டணி அல்ல; எக்கு போல உறுதியான கூட்டணி.**

இந்தியாவில் மற்ற மாநிலங்களில் எல்லாம் மதவாதிகள் அத்துமீறி கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அவர்களால் தமிழ்நாட்டில் எந்த பிரச்சனையையும் உருவாக்க முடியவில்லை. அதற்கு காரணம், இங்கு அசைத்துப் பார்க்க முடியாத அளவிற்கான தலைவராக நம்முடைய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் இருக்கிறார்.

திருச்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எப்படி 3 தலைமுறையை கடந்த உறவு இருக்கிறதோ, அதேபோல தான் தி.மு.க. வுக்கும் காங்கிரசுக்கும் மூன்று தலைமுறைகளை கடந்த உறவு இருக்கிறது.

அதன் வெளிப்பாடுதான் கோவையில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில், "நான் என் வாழ்நாளில் யாரையும் அண்ணா என்று அழைத்து அல்ல; ஸ்டாலின் அவர்களே உங்களை அண்ணா என்று அழைக்கிறேன்" என்று பாசத்தோடு சொன்னது.

எங்கள் கூட்டணியை எந்த சூழ்ச்சி செய்தும் வீழ்த்த முடியாது. இது எக்கு போல உறுதியான கூட்டணி. எண்ணிக்கைக்கான கூட்டணி அல்ல.

தமிழ்நாடு அதிகம் கடன் வாங்குவதாக சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள்.

சிபில் ஸ்கோர் நன்றாக இருக்கும் மாநிலத்திற்கு தான் கடன் கொடுப்பார்கள். மக்களின் வீடுகளை புல்டோசர் கொண்டு இடிக்கும் அரசாங்கம் இருக்கும் உத்தரப்பிரதேச மாநிலத்திற்கு எப்படி அந்த சிபில் ஸ்கோர் நன்றாக இருக்கும். அவர்களை எந்த வங்கியும் கிட்டக்கூட சேர்க்காது.

ஆனால் அனைத்து வகையில் நல்ல வளர்ச்சியை கொண்டு இருக்கும் தமிழ்நாட்டுக்கு தைரியமாக கடன் வழங்க உலக வங்கிகள் தயாராக இருக்கிறார்கள்.

கடந்த காலத்தில் கல்லாப்பட்டி ஆட்சி ஒன்று தமிழ்நாட்டில் இருந்தது. அப்போது தமிழ்நாட்டில் தொழில் முதலீடு செய்ய எந்த நிறுவனமும் முன்வரவில்லை. ஆனால் நம்முடைய முதலமைச்சர் ஆட்சிக்கு வந்தபின்னர், இப்படி ஒரு முதலமைச்சரை நாங்கள் இந்தியாவில் எங்குமே பார்த்ததே இல்லை என்று சொல்லி வியப்போடு தமிழ்நாட்டில் முதலீடு செய்கிறார்கள். அதிகமான தொழில் முதலீடுகளை பெரும் ஸ்ரீபெரும்புதூர் தொகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினராக இதனை நான் பதிவு செய்கிறேன்.

ஒரு கூட்டத்தில் பேசிய போது எனக்கு மூச்சு வாங்கியது. என்ன காரணம் என்று கேட்டார்கள், வேறு எந்த காரணமும் அல்ல, சொல்லத் தொடங்கினால் மூச்சு வாங்கும் அளவுக்கு எண்ணற்ற திட்டங்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி இருக்கிறார். ஆனால் கடந்த காலத்தில் இருந்த கல்லாப் பட்டி ஆட்சியில் இப்படி பெருமையோடு சொல்லும் அளவுக்கு எந்த திட்டமும் இல்லை. அதற்கு பதிலாக ஊழல் தான் நிறைந்து இருந்தது.

நான் உறுதியான சொல்கிறேன், மீண்டும் தமிழ்நாட்டில் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆட்சி தான் தமிழ்நாட்டில் அமையும் என்பதை உறுதியாக சொல்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்

# ரீலும் ரியலும்!



பெரியாரும் அண்ணாவும் கட்டமைத்த
திராவிட பூகோளத்தில்

கலைஞர் எனும் அறிவாலயப் பல்கலைக் கழகத்தில்

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும்
தளும்பாத தன்னிகரில்லாத் தலைமையால்

பட்டை தீட்டப்பட்ட
பவள விழா
வைரம் தான் உதயநிதி ஸ்டாலின் என்றால்..

முதிர்ச்சியும்
பயிற்சியும் இல்லாது

அவசரத்தில் வெளிப்பட்டு
ஆட்டம் போடுகிற

நிலக்கரித்
துண்டுதான்
அந்த
விட்டில் பூச்சி

இது

ரியலுக்கும் ரீலுக்குமான வேறுபாடு...



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்

## நாமக்கல் மாவட்டக் கழக முன்னாள் துணைச் செயலாளர்

# பூங்கோதை செல்லதுரை இல்ல மண விழா வரவேற்பு!

## கழகத்தினர் வாழ்த்து!

நாமக்கல், ஜன.1-

நாமக்கல் மாவட்டம் - படைவீடு, சீனியர் இன்ஜினியர் எலக்ட்ரிக்கல் (ஓய்வு), இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட் ப. செல்லதுரை - நாமக்கல் மாவட்ட கழக முன்னாள் துணைச் செயலாளர்சிவியாம்பாளையம் - வடக்கு பண்ணை பூங்கோதை செல்லத்துரை. புதல்வர் பூ.செ. மதன் முரசொலி - ரெபேகா மதன் முரசொலி ஆகியோரது திருமணவிழா 11.9.2025 அன்று ஆஸ்திரேலியாவில் நடைபெற்றது.

இம் மணமக்களின் வரவேற்பு விழா 4.1.2026 அன்று காலை 11 மணி முதல் 3 மணி வரை நாமக்கல் மோகனூர் சாலை, தோப்பூர் கொங்கு திருமண மாளிகையில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பு விழாவில் கழகத்தினர் ஏராளமானோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.



திருத்துறைப்பூண்டி ஒன்றியம் கச்சனம் ஊராட்சியைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் மாற்றுக்கட்சிகளில் இருந்து விலகி தங்களை மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. முன்னிலையில் கழகத்தில் இணைத்துக்கொண்டனர். ஒன்றியச் செயலாளர் ப.பிரகாஷ், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் கே.ஆர்.வெங்கடேஷ் குமார் மற்றும் ராவணன் அழகு உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.